# இஸ்லாத்தின் பார்வையில் கண்ணியத்தின் மதிப்பு

வெள்ளிக்கிழமை ஜுமுஆ உரை

19 துல் ஹஜ் 1447 ஹிஜ்ரி / 5 ஜூன் கி.பி 2026

அனைத்துப் புகழும் அல்லாஹ்விற்கே உரியது, அவன் முக்காலத்தின் அனைத்தையும் அறிந்தவனாகவும், பேராற்றல் மிக்கவனாகவும் இருக்கிறான். மனிதனுக்கு அவன் நேர்வழியைக் காட்டினான். மனிதனோ அதனை ஏற்று நன்றி செலுத்துபவனாகவோ அல்லது நன்றிகெட்டவனாகவோ ஆகிறான். எவர் நன்றி செலுத்துகிறாரோ, அவரது கூலி பேரின்பச் சுவனமும், நிரந்தரமான வாழ்வும் ஆகும்; மேலும் எவர் நன்றிகெட்டவனாக மாறுகிறானோ, அவன் அல்லாஹ்வைத் தவிர தனக்கு வேறு எந்தப் பாதுகாவலனையும், உதவியாளனையும் காண மாட்டான். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அந்தச் சாட்சியமானது இருள்களை ஒளியாகவும், நெருக்கடிகளை மனமகிழ்ச்சியாகவும், இன்பமாகவும் மாற்றக் கூடியதாகும். மேலும், நமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும், நன்மாராயம் கூறுபவராகவும், எச்சரிப்பவராகவும், அல்லாஹ்வின் அனுமதியோடு அவனின் பக்கம் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் அனுப்பப்பட்ட தூதராவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். இறைவா! அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் அருள்களையும், ஏராளமான சாந்தியையும் பொழிவாயாக!

**அன்பானவர்களே!**

அல்லாஹ் தன் மகத்துவமிக்க வேதத்தில் கட்டளையிட்டபடி, உங்களையும் என்னையும் அல்லாஹ்வை அஞ்சி வாழுமாறு உபதேசித்துக் கொள்கிறேன்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ } [الحشر: 18]

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; மேலும், ஒவ்வொரு ஆத்மாவும் நாளைய (மறுமைக்காக) தான் என்ன தயாரித்து (முன்னனுப்பி) வைத்திருக்கிறது என்பதை கவனித்துக் கொள்ளட்டும். நீங்கள் அல்லாஹ்விற்கே அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவன்." (அல்குர்ஆன் 59 :18).

**அல்லாஹ்வின் அடியார்களே!**

நிச்சயமாக கண்ணியம் (Respect) என்பது இஸ்லாத்தின் மகத்தான விழுமியங்களில் (Values) ஒன்றாகும். அது ஒரு தூய்மையான உள்ளத்திலிருந்தும், அமைதிபெற்ற ஆன்மாவிலிருந்தும் பிறக்கக்கூடியதாகும். கண்ணியம் என்பது பிறரை மதிப்பதும், மரியாதையுடனும், நன்னடத்தையுடனும் அவர்களுடன் பழகுவதுமாகும். மார்க்க ஆதாரங்களை உற்று நோக்குபவர், பல்வேறு வடிவங்களில் பிறரை மதிப்பதையும் கண்ணியப்படுத்துவதையும் இஸ்லாம் எவ்வளவு தெளிவாக வலியுறுத்துகிறது என்பதை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில், இஸ்லாம் அழகிய முறையில் பேசுமாறும், முகமலர்ச்சியோடு இருக்குமாறும் ஏவுகிறது; மேலும், கெட்ட வார்த்தைகளைப் பேசுவதையும், அநாகரீகமாக நடப்பதையும் வன்மையாகத்

தடுக்கிறது. இது முஸ்லிமல்லாதவர்களிடம் பழகும் போது கூட கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கமாகும். அல்லாஹ் கூறுகிறான்

وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا } [البقرة: 83]

"..மேலும் மனிதர்களிடம் அழகிய முறையில் (நன்மையாகப்) பேசுங்கள்." (அல்குர்ஆன் 2 : 83).

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். «إِنَّ مِنْ خِيَارِكُمْ أَحَاسِنَكُمْ أخلاقاً» [أَخْرَجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ]. "நிச்சயமாக உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் நற்குணத்தால் மிக அழகானவரே ஆவார்." (நூல்கள்: புகாரி, முஸ்லிம்).

இது குறித்து கவிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

صلاحُ أَمْرِكَ لِلأَخْلَاقِ مَرْجِعُهُ ... فَقَوِّمِ النَّفْسَ بِالْأَخْلَاقِ تَسْتَقِمِ

وَالنَّفْسُ مِنْ خَيْرِهَا فِي خَيْرِ عَافِيَةٍ ... وَالنَّفْسُ مِنْ شَرِهَا فِي مَرْتَعٍ وَخِمِ

உமது காரியங்களின் சீர்திருத்தம் நற்குணங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது, எனவே உமது ஆன்மாவை நற்பண்புகளால் செப்பனிடுவாய், அது நேர்வழியில் நிலைபெறும்! ஆன்மா தனது நற்செயல்களினால் சிறந்த நல்வாழ்வில் இருக்கும், ஆனால் அது செய்யும் தீமைகளினால் நச்சுத்தன்மை வாய்ந்த மேய்ச்சல் நிலத்தில் வீழ்ந்துவிடும்!

**முஸ்லிம் பெருமக்களே!**

மனிதர்களுக்கு இடையே கண்ணியம் என்பது பல வடிவங்களிலும், பல்வேறு நிலைகளிலும் வெளிப்படுகிறது. அவற்றுள் மிக மகத்தானது, எல்லாம் வல்ல அல்லாஹ்வையும், அவனது தூதர் (ஸல்) அவர்களையும் மதிப்பதும், அல்லாஹ்வின் மார்க்கத்தை மகத்துவப் படுத்துவதுமாகும். அது மார்க்கத்தின் கட்டளைகளைப் பேணுவதன் மூலமும், அல்லாஹ் புனிதமாக்கிய வரம்புகளை மதிப்பவதன் மூலமும் சாத்தியமாகிறது. திருக்குர்ஆன் வழிகாட்டுகிறது. ذَلِكَ وَمَنْ يُعَظِّمْ شَعَائِرَ اللَّهِ فَإِنَّهَا مِنْ تَقْوَى الْقُلُوبِ } [الحج: 32] "(விஷயம்) இதுதான்! மேலும், எவர் அல்லாஹ்வின் அடையாளங்களை மகத்துவப்படுத்துகிறாரோ, நிச்சயமாக அது உள்ளங்களின் இறையச்சத்திலிருந்தே (ஏற்படுவதாகும்)." (அல்குர்ஆன் 22 : 32). மேலும் அல்லாஹ் கண்டித்தவர்களைப் போன்று ஆகிவிடாதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் அல்லாஹ் அவர்கள் குறித்து கூறியுள்ளதாவது,உங்களுக்கு என்ன நேர்ந்தது?அல்லாஹ்வின் மகத்துவத்தையும் மேன்மையையும் நீங்கள் உணராமல் இருக்கின்றீர்கள். (அல் குர்ஆன் 71:13)

கண்ணியத்தின் மிக முக்கிய வடிவங்களில் ஒன்று: தூய்மையான நல்ல வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுவதும், பிறரைக் காயப்படுத்தும் சொற்கள் மற்றும் இழிவான சைகைகளைத் தவிர்ப்பதுமாகும். இவ்விரண்டு தீமைகளைப் பற்றியும் அல்லாஹ் எச்சரிக்கிறான். { وَيْلٌ لِكلِّ هُمَزَةٍ لُمَزَةٍ } [الهمزة: 1] "சைகையினால் இகழ்பவர், முகத்திற்கு நேராகக் குறை கூறுபவர் ஆகிய ஒவ்வொருவருக்கும் கேடுதான்." (அல்குர்ஆன்104 : 1).

இங்கு 'ஹம்ஸ்' (الهمز) என்பது செய்கைகளால் தீங்கிழைப்பதும், கண் பார்வையால் பிறரை இகழ்வதுமாகும்; 'லம்ஸ்' (اللمز) என்பது பேச்சால் குறை கூறுவதாகும். இதற்கு நேர்மாறாக, அல்லாஹ் நன்மையை ஏவுகிறான்:

{ وَقُلْ لِعِبَادِي يَقُولُوا الَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ الشَّيْطَانَ يَنْزَغُ بَيْنَهُمْ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلْإِنْسَانِ عَدُوًّا مُبِينًا } [الإسراء: 53] "மேலும் எனது அடியார்களுக்கு நீர் கூறுவீராக: அவர்கள் மிக அழகிய வார்த்தைகளையே பேசட்டும்; நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கு இடையே குழப்பத்தை ஏற்படுத்துகிறான். நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான எதிரியாக இருக்கிறான்." (அல்குர்ஆன்17 : 53).

கண்ணியத்தின் மிக உன்னதமான வடிவம்: மனிதர்களின் சிந்தனைகளையும் அறிவையும் மதித்து, மிக அழகிய முறையில் அவர்களை நேர்வழியின் பக்கம் திருப்புவதாகும். அபூ உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒரு வாலிபர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! விபச்சாரம் செய்ய எனக்கு அனுமதியளியுங்கள்!" என்று கேட்டார். உடனே மக்கள் அவரை நோக்கி வந்து, அவரை அதட்டி, "நிறுத்து! நிறுத்து!" என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அவரை அருகில் வரவிடுங்கள்" என்றார்கள். அவர் அருகில் நெருங்கி வந்து அமர்ந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவரிடம், "உனது தாய்க்கு இது நடப்பதை நீ விரும்புவாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக! இல்லை, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் என்னை தங்களுக்கு அர்ப்பணமாக்குவானாக!" என்றார். அதற்கு நபியவர்கள், "அவ்வாறே மனிதர்களும் தங்கள் தாயாருக்கு அதை விரும்பமாட்டார்கள்" என்றார்கள். மீண்டும் நபியவர்கள், "உனது மகளுக்கு அதை விரும்புவாயா?" எனக் கேட்க, அவர், "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக இல்லை!" என்றார். நபியவர்கள், "அவ்வாறே மனிதர்களும் தங்கள் மகள்களுக்கு அதை விரும்பமாட்டார்கள்" என்றார்கள். நபியவர்கள், "உனது சகோதரிக்கு அதை விரும்புவாயா?" எனக் கேட்க, அவர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக இல்லை!" என்றார். நபியவர்கள், "அவ்வாறே மனிதர்களும் தங்கள் சகோதரிகளுக்கு அதை விரும்பமாட்டார்கள்" என்றார்கள். நபியவர்கள், "உனது மாமி (அத்தை)க்கு அதை விரும்புவாயா?" எனக் கேட்க, அவர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக இல்லை!" என்றார். நபியவர்கள், "அவ்வாறே மனிதர்களும் தங்கள் மாமி (அத்தை)க்கு அதை விரும்பமாட்டார்கள்" என்றார்கள். நபியவர்கள், "உனது சின்னம்மா (சித்தி) / பெரியம்மாவுக்கு அதை விரும்புவாயா?" எனக் கேட்க, அவர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக இல்லை!" என்றார். நபியவர்கள், "அவ்வாறே மனிதர்களும் தங்கள் சின்னம்மா (சித்தி)/பெரியம்மாக்களுக்கு அதை விரும்பமாட்டார்கள்" என்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் தமது கையை அந்த வாலிபர் மீது வைத்து: "இறைவா! இவரது பாவத்தை மன்னிப்பாயாக! இவரது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவாயாக! இவரது கற்பைக் காப்பாயாக!" என்று பிரார்த்தித்தார்கள். அதற்கடுத்து அந்த வாலிபர் எத்தகைய தவறான பக்கமும் திரும்பிப் பார்க்கவில்லை. (நூல்: இமாம் அஹ்மத், ஷுஜப் அல்-அர்னவூத் ஸஹீஹ் என்றுள்ளார்).

மனிதர்களின் புரிந்துகொள்ளும் திறனில் உள்ள தனிப்பட்ட வேறுபாடுகளைக் கவனிப்பதும் அவர்களின் அறிவை மதிப்பதின் உட்பட்டதே ஆகும்: குறிப்பாக மனிதர்கள் தங்களின் அறிவு, புரிதல் மற்றும் கல்வியில் வெவ்வேறு நிலைகளில் இருக்கிறார்கள் என்பதை நாம் அறியும் போது இது மிக முக்கியமானது. ஸஹீஹ் அல்-புகாரியில் அலி (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். (حَدِّثُوا النَّاسَ بِمَا يَعْرِفُونَ؛ أَتُحِبُّونَ أَنْ يُكَذَّبَ اللَّهُ وَرَسُولُهُ؟) "மனிதர்களுக்கு அவர்கள் அறிந்து புரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களைக் கொண்டு உரையாடுங்கள்; அல்லாஹ்வும் அவனது தூதரும் பொய்ப்பிக்கப்படுவதை நீங்கள் விரும்புவீர்களா?"

**ஈமான் கொண்ட சகோதரர்களே!**

கண்ணியத்தின் மற்றுமொரு வடிவம்: மாற்று மதத்தவர்களை எவ்விதக் காயப்படுத்துதலும், ஏசுதலும், நிந்தித்தலும் இன்றி மிக அழகிய முறையில் சத்தியத்தின் பக்கம் அழைப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்.

{ادْعُ إِلَى سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ رَبَّكَ هُوَ أَعْلَمُ بِمَنْ ضَلَّ عَنْ سَبِيلِهِ وَهُوَ أَعْلَمُ بِالْمُهْتَدِينَ } [النحل: 125]

"(நபியே!) உமது இறைவனின் பாதையின் பக்கம் ஞானத்தைக் கொண்டும், அழகிய நல்லுரைகளைக் கொண்டும் நீர் அழைப்பீராக! மேலும், அவர்களிடம் மிக அழகிய முறையிலேயே விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமது இறைவன், தன் பாதையை விட்டு வழிதவறியவர்களை நன்கு அறிந்தவன்; மேலும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் நன்கு அறிந்தவன்." (அல்குர்ஆன்16 : 125).

கண்ணியத்தின் மிகத் தெளிவான வடிவங்களில் ஒன்று, மனிதர்களுக்கு இடையே எவ்விதப் பாகுபாடும் காட்டாமல் சமத்துவமாக நடத்துவதாகும்: ஒரு நீதிபதி தனது தீர்ப்பில் பலவீனனுக்கும் செல்வாக்குமிக்கவனுக்கும் இடையே பாகுபாடு காட்டக் கூடாது. ஒரு மருத்துவர் ஏழைக்கு சிகிச்சை அளிப்பதில் காட்டும் அதே அக்கறையை செல்வந்தருக்கும் காட்ட வேண்டும். ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு மத்தியில் பாரபட்சம் காட்டக் கூடாது. ஒரு தந்தை தனது பிள்ளைகளுக்கு இடையே நீதமாக நடக்க வேண்டும். ஒரு கணவன் தனது மனைவியருக்கு இடையே நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்.

{إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ} [النحل: 90]

"நிச்சயமாக அல்லாஹ் நீதியையும், நன்மையையும், உறவினர்களுக்குக் கொடுப்பதையும் ஏவுகிறான்; மேலும் மானக்கேடான காரியங்கள், வெறுக்கத்தக்கவை மற்றும் அக்கிரமம் செய்வதை விட்டும் தடுக்கிறான். நீங்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறுவதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகிறான்." (அல்குர்ஆன் 16 : 90).

அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

إِنَّمَا أَهْلَكَ الَّذِينَ قَبْلَكُمْ: أَنَّهُمْ كَانُوا إِذَا سَرَقَ فِيهِمُ الشَّرِيفُ تَرَكُوهُ، وَإِذَا سَرَقَ فِيهِمُ الضَّعِيفُ أَقَامُوا عَلَيْهِ الْحَدَّ، وَايْمُ اللَّهِ، لَوْ أَنَّ فَاطِمَةَ بِنْتَ مُحَمَّدٍ سَرَقَتْ، لَقَطَعْتُ يَدَهَا» [متفق عليه].

"உங்களுக்கு முன்னிருந்தவர்களை அழித்தது எல்லாம், அவர்களில் அந்தஸ்துள்ள ஒரு குலத்தவர் திருடினால் அவரை அவர்கள் தண்டிக்காமல் விட்டுவிடுவார்கள்; அவர்களில் பலவீனமான ஒருவர் திருடினால் அவர் மீது தண்டனையை நிலைநாட்டுவார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடியிருந்தாலும், அவரது கையை நான் நிச்சயம் துண்டித்திருப்பேன்." (நூல்: புகாரி,முஸ்லிம்). மேலும் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.

شَرُّ الطَّعَامِ طَعَامُ الْوَلِيمَةِ، يُدْعَى لَهَا الْأَغْنياءُ، وَيُتْرَكُ الْفُقَرَاءُ» [متفق عليه]«.

"உணவுகளில் மிகக் கெட்ட உணவு வலீமா (திருமண) விருந்து உணவாகும்; அதற்கு செல்வந்தர்கள் அழைக்கப்படுகிறார்கள், ஏழைகள் புறக்கணிக்கப்படுகிறார்கள்." (நூல்: புகாரி, முஸ்லிம்).

**இஸ்லாமிய சகோதரர்களே!**

நோயாளிகள், பலவீனமானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள்ளன அனைவரும் கண்ணியப்படுத்தப்பட வேண்டும், அவர்களின் சூழ்நிலைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அவர்களின் சிரமங்களை நீக்கும் வகையில் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். உத்மான் பின் அபில் ஆஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! என்னை எனது சமூகத்தினருக்கு இமாமாக ஆக்குங்கள்" என்றேன். அதற்கு நபியவர்கள் கூறினார்கள். «أَنْتَ إِمَامُهُمْ، وَاقْتَدِ بِأَضْعَفِهِمْ» [أَخْرَجَهُ أَبُو دَاوُدَ]. "நீர் அவர்களின் இமாம் ஆவீர்; மேலும் அவர்களில் உள்ள பலவீனமானவரைக் கருத்தில் கொண்டு தொழுகையை நடத்துவீராக." (நூல்: அபூ தாவூத், அல்பானி ஸஹீஹ் என்று கூறியுள்ளார்).

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள் 'அராக்' மரத்திலிருந்து மிஸ்வாக் குச்சிகளைப் பறித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மெலிந்த கெண்டைக்கால்களை உடையவராக இருந்ததால் பலத்த காற்று வீசி அவர்களை அசைக்கவே, அங்கிருந்த மக்கள் சிரித்தனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். மக்கள், "அல்லாஹ்வின் நபியே! அவரது கால்களின் மெலிவைக் கண்டு" என்றனர். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்.

وَالَّذِي نَفْسِي بِيَدِهِ، لَهُمَا أَثْقَلُ فِي الْمِيزَانِ مِنْ أُحُدٍ» [أَخْرَجَهُ الإِمَامُ أَحْمَدُ]«.

"எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நிச்சயமாக அந்த இரு கால்களும் தராசின் எடையில் உஹுத் மலையை விட மிகக் கனமானவையாகும்." (நூல்: இமாம் அஹ்மத், ஷுஐப் அல்-அர்னவூத் ஸஹீஹ் என்று கூறியுள்ளார்).

கண்ணியத்தின் இன்னுமொரு வடிவம்: தூய மார்க்கத்தின் விதிகளுக்கு முரணாக இல்லாத மனிதர்களின் கலாச்சார மற்றும் வாழ்வியல் பழக்கவழக்கங்களை (Customs) மதித்து நடப்பதாகும். அல்லாஹ் கூறுகிறான். خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجَاهِلِينَ } [الأعراف: 199] "(நபியே!) நீர் மன்னிப்பைக் கடைபிடிப்பீராக! நன்மையை (உர்ஃப் - நற்பழக்கங்களை) ஏவுவீராக! மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்துவிடுவீராக!" (அல்குர்ஆன், அல்-

அஃராஃப்: 199). இங்கு 'உர்ஃப்' (العُرْف) என்பது மக்கள் தங்களுக்குள் நன்மையாகக் கருதிப் பழகி வரும் நற்காரியங்களாகும்.

அல்லாஹ் உங்களையும் என்னையும் நற்குணம் உடையவர்களாகவும், அவனது படைப்புகளுக்கு நன்மை செய்பவர்களாகவும் ஆக்குவானாக. இக்கூற்றை நான் கூறி, எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்து முஸ்லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்; அவனிடமே பாவமன்னிப்புக் கோருங்கள், நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், அளவற்ற கருணையாளனும் ஆவான்.

## இரண்டாவது உரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்விற்கே உரியது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும், அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவார் என்றும் சாட்சி கூறுகிறேன். அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் அல்லாஹ்வின் ஏராளமான ஸலவாத்தும், ஸலாமும் உண்டாகட்டும்.

கண்ணியத்தின் சிறந்த வடிவங்களில் ஒன்று: பெற்றோரை மதிப்பதும் அவர்களிடம் மிக ஒழுக்கமான முறையில் நடந்து கொள்வதுமாகும். இமாம் புகாரியின் 'அல்-அதபுல் முஃப்ரத்' நூலில் இடம்பெற்றுள்ளதாவது, அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் இரு மனிதர்களைக் கண்டு, அவர்களில் ஒருவரிடம், "இவர் உமக்கு என்ன உறவு?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "என் தந்தை" என்றார். அப்போது அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் கூறினார்கள்.

(لَا تُسَمِّهِ بِاسْمِهِ، وَلَا تَمْشِ أَمَامَهُ، وَلَا تَجْلِسُ قَبْلَهُ)

"தந்தையை அவரது பெயர் சொல்லி அழைக்காதீர், அவரை முந்தி நடந்து சொல்லாதீர், அவர் அமருவதற்கு முன்னால் நீர் அமராதீர்." (அல்பானி இதனை ஸஹீஹ் என்று கூறியுள்ளார்). அதேபோன்று தலைவர்கள், அறிஞர்கள், குர்ஆனை மனனம் செய்துள்ள (ஹாஃபிழ்கள்) மற்றும் முதியவர்களை மதிப்பதும் இதில் அடங்கும். அபூ மூஸா அல்-அஷ்அரீ (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

.إِنَّ مِنْ إِجْلَالِ اللَّهِ تَعالى: إِكْرَامَ ذِي الشَّيْبَةِ المُسْلِمِ، وَحامِلِ القُرْآنِ غَيْرِ الغالي فِيهِ وَالْجَافِي عَنْهُ، وَإِكْرَامَ ذِي السُّلْطَانِ الْمُقْسِطِ» [أَخْرَجَهُ أَبُو دَاوُدَ]«

"நிச்சயமாக அல்லாஹ்வை மகத்துவப்படுத்துவதில் நின்றுள்ளதாகும். அதாவது நரைத்த (வயதான) முஸ்லிமைக் கண்ணியப்படுத்துவதும், குர்ஆனை மனனம் செய்து அதில் வரம்பு மீறாமலும், அதை அலட்சியப்படுத்தாமலும் வாழ்பவரைக் கண்ணியப்படுத்துவதும், மற்றும் நீதியான ஆட்சியாளரைக் கண்ணியப்படுத்துவதும் ஆகும்." (நூல்: அபூதாவூத், அல்பானி ஹஸன் என்றுகூறியுள்ளார்).

**முஸ்லிம்களே!**

இந்த உயரிய நற்பண்பு நமக்கு எவ்வளவு தேவையானது! கண்ணியம் என்பது சமூகத்தில் எவ்வளவு அன்பையும் பரஸ்பர பிணைப்பையும் ஏற்படுத்துகிறது; அதன் மூலம் எவ்வளவு நற்கனிகள் அறுவடை செய்யப்படுகின்றன! மக்கள் தங்களுக்கு ஒரு நல்வார்த்தை அல்லது ஒரு உண்மையான புன்னகையின் மூலம் நன்மை செய்பவர்களை விரும்புகிறார்கள். மாறாக, தங்களுக்குத் தீங்கு இழைப்பவர்களை அவர்கள் ஒருபோதும் விரும்புவதில்லை, தீமை செய்பவர் எவ்வளவு பெரிய தகுதியுடையவராக இருந்தாலும் சரி. இது பற்றி கவிதை வரி ஒன்றில் கூறப்பட்டுள்ளதாவது,

أَحْسِنْ إِلَى النَّاسِ تَسْتَعْبِدْ قُلُوبَهُمُ ... فَطَالَمَا اسْتَعْبَدَ الْإِنْسَانَ إِحْسَانُ

“மனிதர்களுக்கு நன்மை செய், அதனால் அவர்களின் உள்ளங்களை நீ உனக்கு அடிமையாக்கி விடுவாய் (அதாவது அன்பால் வென்றுவிடுவாய்); ஏனெனில், மனிதனை எப்போதும் அடிமையாக்குவது அவனுக்குச் செய்யப்படும் நன்மையே ஆகும்!”

**அல்லாஹ்வின் அடியார்களே!**

அல்லாஹ்வின் கடமைகளை (ஃபர்ளுகளை) நிறைவேற்றுவதற்கும், அவனது அடியார்களுக்கு நன்மை செய்வதற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்.

{ وَإِذْ أَخَذْنَا مِيثَاقَ بَنِي إِسْرَائِيلَ لَا تَعْبُدُونَ إِلَّا اللَّهَ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا وَذِي الْقُرْبَى وَالْيَتَامَى وَالْمَسَاكِينِ وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ } [البقرة: 83]

"இஸ்ராயீலின் சந்ததியினரிடம் நாம் உடன்படிக்கை வாங்கியதை (நினைவுகூருங்கள்). 'நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது; பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நன்மை செய்ய வேண்டும்; மனிதர்களிடம் அழகிய முறையில் பேச வேண்டும்; தொழுகையை நிலைநிறுத்த வேண்டும்; இன்னும் ஜகாத் கொடுத்து வர வேண்டும்' (என்று உடன்படிக்கை வாங்கினோம்)." (அல்குர்ஆன் 2 : 83).

இறைவா! உனது அடியாரும் நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் பொழிவாயாக! யா ரஹ்மானே! அவர்களின் தோழர்கள் அனைவர் மீதும், எங்களின் மீதும் உனது கருணையைக் கொண்டு திருப்தியடைவாயாக, இறைவா! உன்னைத் தியானிக்கவும், உனக்கு நன்றி செலுத்தவும், உன்னை அழகிய முறையில் வணங்கவும் எங்களுக்கு உதவி செய்வாயாக! இறைவா! எங்களுக்கு ஆதரவாக இரு, எங்களுக்கு எதிராக இருந்துவிடாதே; எங்களுக்கு உதவி செய், எங்களுக்கு எதிராக எவருக்கும் உதவி செய்துவிடாதே; எங்களுக்கு நேர்வழியைக் காட்டு, நேர்வழியை எங்களுக்கு எளிதாக்குவாயாக! இறைவா! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்து தீமைகள் மற்றும் சூழ்ச்சிகளிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்நாட்டையும் மற்ற அனைத்து முஸ்லிம் நாடுகளையும் அமைதியும், பாதுகாப்பும் நிறைந்ததாக ஆக்குவாயாக!

இறைவா! எல்லையில் காவல் காக்கும் எங்கள் சகோதரர்கள், பாதுகாப்புப் படையினர், இராணுவத்தினர், தேசியக் காவல்படையினர் மற்றும் நாட்டின் பாதுகாப்பிற்காகப் பாடுபடும் அனைவரையும் பாதுகாப்பாயாக! அவர்களின் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! இறைவா! எங்களது அமீரையும் (ஆட்சியாளர்) அவரது இளவரசரையும் உனக்கு உகந்த மற்றும் நீ விரும்பும் நற்செயல்களுக்குத் தவ்பீக் செய்வாயாக! அவர்களின் கரங்களை நன்மையின் பக்கமும் இறையச்சத்தின் பக்கமும் திருப்புவாயாக! வ ஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

(ஜுமுஆ உரை மாதிரி தயாரிப்புக் குழு)